04.08.2025

Elec.O.P.No. 164 /2022

**ம.சா.2 – ராஜேந்திரன்**

**<u>1ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

மனுதாரர் என் நண்பர். இந்த தேர்தலில் என் மனைவி 2–ஆவது வார்டு உறுப்பினர் பதவிக்கு போட்டியிட்டார். மனுதாரர் 6–ஆம் வார்டிற்கு போட்டியிட்டார். என் மனைவி போட்டியிட்ட 2–ஆவது வார்டு மனு பரிசீலனையின்போது நான் அங்கு இருந்தேன். 2–ஆம் எதிர்மனுதாரர் பெயரில் ஆறு வழக்குகள் நிலுவையில் இருந்தது. மனு பரிசீலனையின்போது 2–ஆம் எதிர்மனுதாரர்மீது இரண்டு குற்ற வழக்குகள் நிலுவையில் இருந்தது. நான் கொடுத்த ஆட்சேபனை மனுவில் இரண்டு வழக்குகள் நிலுவையில் இருப்பதாகவும், மற்ற வழக்குகள் என்ன ஆனது என்று தெரியாது என்று சொல்லியுள்ளேன். இரண்டு வழக்குகள் நிலுவையில் உள்ளது என நான் சொல்லியது சரி. ஐந்து வழக்குகள் நிலுவையில் இருந்தது என்று சொன்னால் அது தவறு. நான் எழுத்துப்பூர்வமாக ஆட்சேபனை கொடுத்தேன். ஆனால், அவர் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்வதை அந்த மனுவில் எழுதித்தரச் சொல்லி கேட்டேனா என்றால் கேட்டேன், அவர்கள் தரவில்லை. அவ்வாறு நான் ஆட்சேபனை செய்த மனுவை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. மனுதாரர் கேட்டுக்கொண்டதிற்கிணங்க அவர் என் நண்பர் என்பதால் மனுவே கொடுக்காமல் மனு கொடுத்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ../

**2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-**

நான் பி.இ. படித்துள்ளேன். என் மனைவி தேர்தலில் தோல்வி அடைந்தது சம்பந்தமாக ஆட்சேபனை செய்து தேர்தல் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. 2-ஆம் எதிர்மனுதாரர் மீது வழக்குகள் நிலுவையில் இருப்பது சம்பந்தமாக எனக்கு தேர்தலுக்கு முன்பே தெரியும். இதற்கு முன்பும் என் மனைவி தேர்தலில் போட்டியிட்டுள்ளார். என் மனைவி இதற்கு முன்பு 2001-ஆம் ஆண்டு தலைவர் பதவிக்கு நேரடியாக போட்டியிட்டு வெற்றி பெற்றார், 2006-ஆம் ஆண்டு இரண்டாவது வார்டில் வார்டு உறுப்பினர் பதவிக்கு நின்று வெற்றி பெற்றார். அந்த இரண்டு தேர்தல்களிலும் 2-ஆம் எதிர்மனுதாரர் போட்டியிட்டாரா என்றால் போட்டியிட்டார். 2001-ஆம் ஆண்டு 9-ஆவது வார்டு தேர்தலில் நின்று தோற்றார். 2011-ஆம் ஆண்டு தலைவர் பதவிக்கு போட்டியிட்டு தோல்வியுற்றார். அந்த சமயத்திலும் 2-ஆம் எதிர்மனுதாரர்மீது குற்ற வழக்குகள் நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். அப்போது அவர் மீது குற்ற வழக்குகள் உள்ளது என்று ஆட்சேபனை மனு கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. 2-ஆம் எதிர்மனுதாரர் கவுன்சிலராக தேர்ந்தெடுக்கப்பட்டு அதன்மூலமாக தலைவர் பதவிக்கு வந்துள்ளார் என்றால் சரிதான். தேர்தல் கையேட்டில் தேர்தல் சம்பந்தமாக ஒரு மனு கொடுத்து அந்த மனுவை சம்பந்தப்பட்ட அதிகாரி வாங்க மறுத்தால், அதற்கு மேல் உள்ள அதிகாரியிடம் தரவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு நான் 2-ஆம் எதிர்மனுதாரருக்கு எதிராக வேட்பு மனுவை பரிசீலனை செய்யக்கூடாது என்று ஒரு ஆட்சேபனை மனு கொடுத்து, அதை வேட்பு மனு பரிசீலனை அதிகாரி வாங்க மறுத்தபோது ../

அதற்கு எதிராக மேல் முறையீடு அதிகாரிக்கு புகார் கொடுத்தேனா என்றால் உடனடியாக கொடுத்தேன். அந்த மேல் முறையீட்டு அதிகாரிக்கு கொடுத்த மனு என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. அதேபோல் என்னுடைய ஆட்சேபனை மனுவும் என்னிடம் உள்ளது. அவ்வாறு வேட்பு மனு பரிசீலனை அதிகாரியும் மேல்முறையீட்டு அதிகாரியும் என்னுடைய ஆட்சேபனை மனுவை வாங்க மறுத்துவிட்டார்கள் என்பது குறித்து நீதிமன்றத்தை நாடி உத்தரவு எதுவும் பெற்றேனா என்றால் இல்லை. அவ்வாறு நீதிமன்ற உத்தரவு பெறாததற்கு காரணம் உண்டா என்றால் நாங்கள் இருவரும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள். என்னுடைய தூண்டுதலில்தான் மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. என் மனைவி ஏற்கனவே தலைவராக செயலாற்றி இந்த தேர்தலில் தோல்வியுற்றதால் 2–ஆம் எதிர்மனுதாரர் தலைவராக இருக்கக்கூடாது என்ற காழ்ப்புணர்ச்சி காரணமாக இந்த வழக்கை தாமோதரன் மூலமாக தாக்கல் செய்கிறேன் என்றால் சரியல்ல. வேட்பு மனு பரிசீலனை முடிந்தபிறகு இறுதி தகுதியான வேட்பாளர் பட்டியல் வெளியிட்ட பிறகு அதை ஆட்சேபித்து மனு கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. வாக்கு எண்ணிக்கையின்போது நான் உடன் இருந்தேன். 2–ஆம் எதிர்மனுதாரர் தலைவராக தேர்வு செய்யப்பட்டபோது எழுத்துப்பூர்வமாக ஆட்சேபனை செய்தேனா என்றால் இல்லை. 2–ஆம் எதிர்மனுதாரர் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அவருடைய தேர்தல் செல்லாது என்று ஆட்சேபனை மனு எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. 1992 வருடத்திய வழக்கில் அவருக்கு தண்டனை கிடைத்தது. அந்த வழக்கில் என் தாயாருடைய அம்மாதான் புகார்தாரர். அந்த 1992 வழக்கில் 2–ஆம் எதிர்மனுதாரர் மேல்முறையீடு செய்து விடுதலை செய்யப்பட்டார் என்றால்../

தெரியாது. அவ்வாறு விடுதலை செய்யப்பட்டார் என்பதை தெரிந்துக்கொள்ளாமலே நான் ஆட்சேபனை மனு கொடுத்தேன் என்றால் சரிதான். தேர்தல் நடத்தும் அதிகாரியிடமும் அல்லது மேல்முறையீட்டு அதிகாரியிடமும் எந்தவொரு ஆட்சேபனையும் நான் எழுத்துப்பூர்வமாக எதுவும் கொடுக்கவில்லை என்றாலும், மனுதாரர் கேட்டுக்கொண்டபடியும், ஏற்கனவே எனக்கும் 2–ஆம் எதிர்மனதாரருக்கும் உள்ள காழ்ப்புணர்ச்சி காரணமாகவும் கொடுக்காத மனுவை கொடுத்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு உண்மையிலேயே கொடுத்திருந்தால் அவருடைய மனுவை நிராகரிக்க சொல்லி உரிய சட்ட நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** : இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

(Sd/– M. Christopher)
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.